# 2017 புரட்டாதி மாத இறைவேண்டலுக்கான கைக்கொடுத்தல்

***‘‘கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்’’*** (புனித யோவான் 12:24)

கடந்த மாதத்தில் வேண்டுதல் மற்றும் நடுநிலைவகித்தலின் பணியாளர்களாக நீங்களும் நானும் ‘‘அவர் உங்களுக்கு சொல்வதெல்லாம் செய்யுங்கள்’’ எனும் தலைப்பினூடாக அனைத்து புபுது மக்களும் ,அனைத்து கிறிஸ்தவ மக்களும் தூய ஆவியானவரின் வரம் கிடைக்குமாறு வேண்டுவதற்கும் ,உங்களுக்கும், எனக்கும் அந்த அனுபவத்திற்கு உள்ளாவதற்கும் முடியுமானது என்பது எமது விசுவாசம், நாம் நிரந்தரமும் தூய ஆவியானவருக்கு விழிப்புறுவோமாயின் அது அதிகமாக பலனளித்திட ஏதுவாகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இம் மாதத்தில் எமக்கு கிடைத்திருப்பது மிகவும் சவாலான வார்த்தை அதாவது **‘‘கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்’’** எனும் வார்த்தை. இந்த வார்த்தையானது அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் திருமுழுக்கு மற்றும் உறுதிப்பூசுதல் அருட்சாதனங்களின் மூலம் கிடைத்த விசேட வரமாகும். துன்புறுதல் மற்றும் வேதனையை அனுபவித்தலின்றி உண்மையான கிறிஸ்தவ சீடனாகிட முடியாது. அப்படியாயின் இம்மாதம் முழுவதும் முணுமணுக்காமல் நாம் முகங்கொடுக்கவிருக்கும் அனைத்து துன்பங்களையும் கிறிஸ்து ஆண்டவரின் பாடுகள், மரணம், உயிர்ப்பிற்கு பங்குபெற கிடைக்கும் அருட்சாதனமாக்கிக் கொள்வோம். அவ்வண்ணமே புபுது வாழ்க்கையை வாழுகின்ற அனைவரும் போன்று அனைத்து கிறிஸ்தவமக்களுக்கும் இந்த வாழ்க்கைக்கு அதிகதிகமாய் உள்ளாவதற்கு தேவையான தூய ஆவியானவரின் வல்லமையை வேண்டி நடுநிலைவகித்தவாறு செபிப்போம்.

‘‘கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணைப் பங்கு கொள்கிறீர்கள் எனஎண்ணி மகிழுங்கள். அப்பொழுது கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படும் வேளையில் இன்னும் மகிழ்ந்து பேருவகை கொள்வீர்கள்’’ (1பேதுரு 4:13)

## *முதலாம் வாரம் :* தியான வாசிப்பு புனித யோவான் 12: 20 -26

### *வேண்டுதலுக்கான விசேடநோக்கு* :

கிறிஸ்தவன் என்பதால் துன்புறும் அனைத்து மக்களுக்காகவும் (10 நிமிடம்)

***வேறு வேண்டுதல்கள்*** :

- ❖ சுவாமி அப்பா தற்போது சுகமடைந்து கொண்டிருக்கிறார். அவருக்காக புகழ்ச்சி செய்யும் அதேவேளை அவருக்கு மேலும் மேலும் தெய்வாதீனசுகம் கிடைக்கும் பொருட்டு செபிக்கவும்.
- ❖ புபுது இறைவாக்கினர் குழு, துணையாளர் குழு, சுசுமத குழு பொறுப்பேற்றிருக்கும் அனைவருக்காகவும்.
- ❖ வெளிநாடுகளில் இருக்கும் புபுது சங்கங்கள் மற்றும் அவற்றில் பொறுப்பேற்றிருக்கும் அனைவருக்காகவும்.

- ❖ புரட்டாதி மாதம் 1,2,3,4,5 நாட்களில் ஸ்ரீ பிரசங்சாராமயில் நடைபெறும் பரிசுத்த வேதாகம ஞானஒடுக்கத்திற்காகவும்
- ❖ வார்த்தையின் ஊழியர் மற்றும் பங்குபெற இருக்கும் மக்களுக்காகவும்.
- ❖ டெங்கு உட்பட தொற்று நோய்களுக்கு ஏதுவாகும் குப்பைகளை இடத்திற்கிடம் போடுதல் மற்றும் பொலித்தீன், பிளாஸ்டிக் உட்பட உக்காத பொருட்களால் சூழலுக்கு ஏற்படும் அழிவினை தடுத்திட அரசு மற்றும் மக்கள் எடுக்கும் முயற்சிகள் நற்பலனளிக்குமாறு
- ❖ நீண்டகாலமாக'சைட்டம்'தனியார் வைத்திய பாடசாலைகளுக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர்கள் முன்வைக்கும் எதிர்ப்பு நடவடிக்கைக்கு தகுந்த பதில் கிடைக்குமாறு
- ❖ ஏனைய வேண்டுதல்கள்…..

## *இரண்டாம் வாரம்* : தியானவாசிப்பு : 1 பேதுரு 4: 12-19

### *வேண்டுதலுக்கான விசேட நோக்கு :*

மாரடைப்பு, புற்றுநோய், சிறுநீரக நோய் போன்ற நீண்டகால நோய்களால் துன்புறும் அனைத்து நோயாளர்களுக்காகவும் மற்றும் அந்நோய்களுக்கு காரணமாக செயற்கை சுவையூட்டிகள் மற்றும் கிருமிநாசினிகள் கலந்த உணவுகளைப் பயன்படுத்தலினின்றுமக்கள் பாதுகாக்கப்படும் பொருட்டு… (10 நிமிடம்)

*வேறுவேண்டுதல்கள் :*

- ❖ புரட்டாதி 9,10 தினங்களில் ஸ்ரீ பிரசங்சாராமயில் நடைபெறும் உள்மனக் குணமளிப்பு சம்மேளனத்தில் கலந்துகொள்ளும் மக்கள் மற்றும் உபஸ்தான பணிவிடை குழுவினருக்காக
- ❖ மது, போதைவஸ்துகளுக்கு அடிமையாகியிருக்கும் அனைவருக்கும், மற்றும் அவற்றை விநியோகிக்கும் அனைவரும் சட்டத்தின் பிடியில் அகப்படும் பொருட்டு
- ❖ விவசாயிகள், மீனவர்கள், தச்சுவேலைத்தளங்களில் குறைந்த சம்பளத்திற்கு வேலைசெய்யும் பணியாளர்கள், தொழிலாளர்களுக்காகவும்
- ❖ ஏனைய வேண்டுதல்கள்…..

## *மூன்றாம் வாரம்* : தியானவாசிப்பு 1பேதுரு 3: 13-19

### *வேண்டுதலுக்கானவிசேடநோக்கு :*

நொரச்சோலை நிலக்கரி ஆலையினால் அதன் சுற்றுவட்டாரத்தில் வாழும் மீனவ மக்கள் மற்றும் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தினின்று அவர்களை விடுவிக்குமாறும் அந்த தொழிற்சாலையினால் சூழலுக்கு ஏற்படும் அழிவினை தடுப்பதற்கு அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான ஞானம் அவர்களுக்கு கிடைக்குமாறு வேண்டி…. (10 நிமிடம்)

*வேறுவேண்டுதல்கள் :*

- ❖ புபுது வாழ்க்கையினின்று விலகி இருக்கும் அனைவருக்காகவும்.
- ❖ புரட்டாதிமாதம் 23ம் திகதி ஸ்ரீ பிரசங்சாராமயில் நடைபெறும் புபுது தேசிய தாய்மார் ரெலிக்காக

- ❖ ஏனைய வேண்டுதல்கள்…………..

***நான்காம் வாரம் :*** தியானவாசிப்பு 1 பேதுரு 1: 6-9

***வேண்டுதலுக்கானவிசேடநோக்கு*** *:*
தேசத்திற்காக (20 நிமிடம்)

***வேறுவேண்டுதல்கள் :***

- ❖ பிரபோதைய சங்கத்தினால் முன்கொண்டு வரப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் மற்றும் சர்வமதஒற்றுமை சங்கத்தின் வேலைத் திட்டங்களினூடாகவும் நாட்டில் தர்மத்திற்கு முதலிடம் கொடுக்கும் சூழல் உருவாகிடவும்.
- ❖ பரிசுத்த பாப்பரசர் உள்ளிட்ட அனைத்து குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் மறைபரப்பு சேவையில் ஈடுபட்டுள்ள அனைவருக்காகவும்
- ❖ ஏனைய வேண்டுதல்கள்…..

***"உங்களை அழைத்தவர் தூய்மையுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் உங்கள் நடத்தையிலெல்லாம் தூய்மையுள்ளவர்களாய் இருங்கள். நீங்கள் தூயவராயிருங்கள். ஏனெனில் 'நான் தூயவன்' என மறைநூலில் எழுதப்பட்டிருக்கிறது. (1பேதுரு 1:15-16)***

***கவனத்திற்கு***

- ❖ வெள்ளிக்கிழமை செபத்தின் மற்றும் உபவாசத்தின் நாளாக கடைபிடியுங்கள்.
- ❖ ஶ்ரீ பிரசங்காராமயில் நற்கருணைநாதர் முன்னிலையில் செய்யும் தொடர் செபத்தில் முடியுமாயின் நீங்களும் மாதத்திற்கு ஒரு முறையாவது கலந்துகொள்ளுங்கள்.

வேண்டுதல் மற்றும் நடுநிலை சேவை